1992 மார்ச் 31]

தொடரா இனச் செலவாக 55 இலட்சம் ரூபாயும் தொடரினச் செலவாக 5 இலட்சம் ரூபாயும் ஆக, 60 இலட்சம் ரூபாய் செலவாகும். அரசினுடைய நிதிநிலையைக் கருத்திலே கொண்டு, இப்போது அரசின் சார்பிலே தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கிற கருத்துரு எதுவும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, தனியார் துறையிலே ஆரம்பிக்க வேண்டுமென்றால், இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு பரிசீலித்து முடிவினைப் பின்னர் அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 411. திரு. எம். சே. பாலன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

411—

தாடண்டர் நகர் அருகிலுள்ள குடிசை வாழ் மக்களுக்கு மாற்று இடம் ஒதுக்குதல்.

*4382—திரு. எம். கே. பாலன்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சைதாப்பேட்டை கால்வாய் ஓரம் தாடண்டர் நகர் பக்கத்தில் உள்ள குடிசைப் பகுதிகளை அகற்றி, அவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆற்றோரங்களில் வாழும் குடிசைப்பகுதி மக்களை மாற்று இடங்களில் குடியமர்த்தும் திட்டத்திற்கு மான்யம் கோரி மைய அரசுக்கு பிரேரணை அனுப்பப் பட்டுள்ளது. இத்திட்டம் மைய அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் ஒப்புதல் கிடைக்கப்பெற்று நிறைவேற்றப்படும் தருவாயில், சைதாப்பேட்டை கால்வாய் தாடண்டர் நகர் ஓரம் அமைந்துள்ள குடிசைப் பகுதி மக்களை மாற்று இடங்களில் குடியமர்த்த நடவடிககை எடுக்கப்படும்.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கால்வாய் ஓரமாக அமைந்து இருககின்ற குடிசைப் பகுதிகளில்

உள்ளவர்கள் புரட்சித் தலைவியின்மீது அன்பு கொண்டவர்களாக இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு வீட்டிலும் என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய படங்களை நான் தேர்தல் நேரத்திலே பார்த்த காரணத்தால், அங்கே வாழ்கின்ற மக்களுக்கு சாலை வசதி, விளக்கு வசதி, ரோடு வசதி, கக்கூஸ் மற்றும், பாத்ரூம் வசதி போன்ற எந்த வசதியும் இல்லாமல் கஷ்டமான சூழ்நிலையிலே அவர்கள் அங்கே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு என்னுடைய தொகுதியில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். கே. பாலன், நீங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வியை இந்த அமைச்சரிடம் கேட்கக் கூடாது. நீங்கள் இங்கே கேட்டிருப்பது, குடிசைப் பகுதிகளை அகற்றி மாற்று இடம் ஒதுக்கப்படுமா என்பது தான். லைட் வசதி மற்ற வசதிகள் செய்யவேண்டியது எல்லாம் நீங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டியது.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து வசதிகளும் செய்து கொடுக்க முடியாத அந்த இடத்திலே குடிசைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகையால் அந்த இடத்திலே மிகப் பெரிய தீ விபத்து 26-7-1991 அன்று ஏற்பட்ட காரணத்தால் 36 வீடுகள் எரிந்து சாம்பல் ஆயின. அந்த இடம் நான்கு பக்கங்களுக்கும் ஓடி தப்பிக்க முடியாத இடமாக இருக்கின்ற காரணத்தால், ஒரு பெண் குழந்தை இறந்து விட்டது. ஒரு வயதான பாட்டிக்குக்கூட அதிக காயம் ஏற்பட்டது. ஆகையால் அந்த பகுதியிலே வாழ்ந்த கொண்டிருக்கிற குடிசை மக்களுக்கு என்னுடைய தொகுதியிலே கட்டிக் கொண்டிருக்கிற, வெங்கடாபுரத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்கு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற எல்லா அமைச்சர்களுக்கும் கேள்வி கேட்டுவிட்டு கடைசியிலே இவருக்கு கேள்வி என்பதையே நீங்கள் விட்டு வைக்கவில்லை.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரை எந்த ஒரு காலகட்டத்திலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலே கொண்டிருக்கிற அன்பின் காரணத்தாலும் பாசத்தின் காரணத்தாலும் சென்னையில் இருக்கின்ற அத்தனை தொகுதிகளிலும் வெற்றி பெறக்கூடிய

1992 மார்ச் 31]

நிலைமையை உருவாக்கித் தந்தவர்கள் அந்த ஏழையெளிய மக்கள். அந்த அடிப்படையிலே போற்றுதலுக்குரிய முதல்வர் அவர்களுடைய அரசு ஆட்சேபனைக்குரிய பகுதி என்று எடுத்துக்கொண்டு சுமார் 55 ஆயிரம் குடும்பங்கள் மாற்று இடங்களில் குடியமர்த்தப்படவேண்டுமென்று வாரியத்திற்கு பிரேரணை அனுப்பியிருக்கிறது. அந்த வகையிலே 37,879 குடும்பங்களை பள்ளிக்கரணை, எழில் நகர், இளங்கோ நகர் மற்றும் கொரட்டூர் ஆகிய பகுதிகளில் ரூபாய் 56 கோடியே 88 இலட்சம் செலவிலே, திட்ட மதிப்பீட்டிலே மேம்படுத்தப்பட்ட மனைகளில் அவர்களைக் குடியமர்த்துவதற்காக மத்திய அரசு மற்றும் மாநில அரசு மானிய உதவிகளுடனும் அட்கோ கடன் உதவியுடனும் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதம் உள்ள குடும்பங்களுக்குத் தேவையான மாற்று இடம் தேர்ந்தெடுக்க குடிசை மாற்று வாரியம் நடவடிக்கையெடுத்து வருகிறது. மேற்காணும் செயற்குறிப்பு மத்திய அரசில் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, குடும்பம் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வீதம் ரூபாய் 15 கோடியே 15 இலட்சம் மானியம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளபட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்து, மானியம் கிடைத்தவுடன் சைதாப்பேட்டை கால்வாய் ஓரம் தாடண்டர்நகர் ஓரம் அமைந்துள்ள குடிசைப் பகுதி மாற்று இடங்களில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலே குடிசை மாற்று வாரிய வீடுகள் வெங்கடாபுரத்திலே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய தொகுதியிலே வாழ்ந்து கொண்டு இருக்கிற குடிசைப் பகுதி மக்களுக்கு இந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற குடிசை மக்களுக்கு அங்கே மாற்றிக் கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை அரசினுடைய செயற்குறிப்பில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 412, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.